பக்கங்கள் 6 விலை சதம் 30 ★

ஈழநாடு

The EELANADU

மலர் 18 மார்கழி 19 முஹற 12 இதழ் 324

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 3-1-77

ரூ. 35 ஆயிரம் நகைகள், பணம் கொள்ளை!

அராலியில் சம்பவம்

சங்கானை, ஞாயிறு

வீடு ஒன்றிலிருந்து 31 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் 3,300 ரூபா பணமும் கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று தெற்கு அராலியில் இடம்பெற்றது.

வீட்டுச் சொந்தக்காரர்கள் தூக்கத்தில் இருந்த சமயம் ஜன்னல் கம்பியை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் அங்கிருந்த சாக்கு ஒன்றில் இருந்த நகைகள் இருந்த பெட்டியின் திறப்பை எடுத்து பெட்டியிலிருந்த நகைகளை திருடிச்சென்றனராம். அதுடன் சைக்கிள் ஒன்றையும் அவர்கள் திருடிச்சென்றுள்ளனராம்.

சிற்றம்பலம் வேலுப்பிள்ளை என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது.

இரண்டு தாலிக்கொடிகள்

[6-ம் பக்கம் பார்க்க]

அரசாங்க அதிபர்களின் பொறுப்பில்

மாவு, எரிபொருள் விநியோகம்

எண்ணெய் வழங்குவதில் பஸ்களுக்கு முதலிடம்

கொழும்பு, ஞாயிறு

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள மாவு, எரிபொருள் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு சகல மாவட்டங்களிலும் அரசாங்க அதிபர்களின் பொறுப்பில் இப்பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

மாவு, எரிபொருள் ஆகியவற்றின் சீரான விநியோகத்திற்கான தீவிரநடவடிக்கைகளை அரசாங்க அதிபர்கள் மேற்கொண்டுள்ளனர்.

ரயில் சேவை ஸ்தம்பித்த போதிலும் மாவு, எரிபொருள் ஆகியவை தனியார் கூட்டுறவு லொறிகள் மூலம் சகல மாவட்டங்களுக்கும் தொடர்ந்து அனுப்பி வைக்கப்படுகின்றன என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாணுக்கு மட்டுமே மாவு

பாண் தயாரிப்புக்கு மட்டும் மாவை பேக்கரிகளுக்கு விநியோகம் செய்யுமாறு அரசாங்க அதிபர்களை அரசு கேட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்

(6ம் பக்கம் பார்க்க)

ரயில்வே வேலைநிறுத்தம்:

668 ஊழியர் வேலைக்கு திரும்பினர்

கொழும்பு, ஞாயிறு

ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்தமாதம் 21-ம் திகதி முதல் வேலைநிறுத்தம்செய்து வரும் ஊழியர்களில் இன்று 668 ஊழியர்கள் வேலைக்குத் திரும்பினர் என்று அரசாங்க அறிவித்தல் ஒன்று தெரிவிக்கிறது.

எனினும் ரயில்சேவைகள் எதுவும் இன்று நடைபெறவில்லை. (உ)

பொலிசாருக்கு உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

அரசாங்கத்துக்குச் சொந்தமான இரா சொத்துக்களையும் புகைவண்டிப் பாதைகளையும் பாதுகாப்பதற்கு விசேஷமான ரோந்துச் சேவைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் மாஅதிபர் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பியிருக்கின்றார்.

அரசாங்கச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய அறிக்கைகளை தாமதமின்றி விசாரித்து சதி நாச வேலைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்யுமாறு பொலிசார் கேட்கப்பட்டுள்ளனர். (மா)

வரிகளைச் செலுத்தினர்

கொழும்பு, ஞாயிறு

1976-ம் ஆண்டுக்கான மொத்த வியாபார வருமான வரிகளை பெரும்பாலான மதுபானக் கடை லைசென்ஸ்காரர்கள் செலுத்திவிட்டனர். வருமானவரி இலாகா 30 லட்சம் ரூபாவை இவர்களிடமிருந்து வசூலித்துள்ளது. (மா)

வரட்டு கௌரவத்தை விட்டு மக்கள் இடர் போக்கவும்

உடுப்பிட்டி எம்.பி. அரசுக்கு கோரிக்கை

நெல்லியடி, ஞாயிறு

''அரசாங்கம் [illegible] வரட்டுக் கௌரவத்தை உடன் கைவிட்டு வேலை நிறுத்தக்காரர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர்களைப் போக்கவும்.''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கு அனுப்பியுள்ள அவசரத் தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அத் தந்தியில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''நாட்டில் நடைபெற்று வரும் புகையிரதஊழியர்களின் வேலைநிறுத்தத்தினால் சாதாரண பொது மக்கள் தமக்குத் தேவையான உணவுப்பொருட்களையும் விவசாயத் தேவைக்குரிய எரி பொருட்களையும் பெற முடியாது அன்றாடம் தவியாய்த் தவிக்கிறார்கள். எனவே மக்களின் நலன் கருதியும் அவர்களின் தேவையையும் உணர்ந்து அரச [illegible] கொள்ள, வரட்டுக் கௌரவத்தை உடன் கைவிட்டு வேலைநிறுத்தக்காரரைப்பேச்சுவார்த்தைக்கு அழைத்து இவ் வேலைநிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவும்''.

அரசியல் அதிகாரிகள் மாநாடு

கொழும்பு, ஞாயிறு

மாவட்ட அரசியல் அதிகாரிகளின் மாநாடு இம்மாதம் 7-ம் திகதி கொழும்பில் நடைபெறும்.

பொதுநிர்வாக உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டில் பிரதமமந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விசேட உரையாற்றுவார்.

இம் மாநாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்வார்கள். (உ)

யாழ் கொழும்பு

பஸ் பிரயாணிகள் அதிகரிப்பு: இ.போ.ச.கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் வண்டிமூலம் கொழும்புக்குப் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் தொகையிலும் அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து 6 பஸ்களும் பருத்தித்துறையிலிருந்து 2பஸ்களுமாகத் தினமும் 8 பஸ் வண்டிகள் சேவையிலீடுபடுத்தப்பட்டபோதிலும், பஸ் வண்டிகளில் ஏற்றப்படும் பிரயாணிகளின் தொகையினை இ.போ.ச. டிப்போ தற்போது கட்டுப்படுத்தியுள்ளது.

இச்சேவையில் பிரயாணம் செய்வதற்குரிய ஆசனங்களையும் பிரயாணிகளால் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டு விடுகின்றன.

லொறிகளில் பிரயாணிகள்

வடபகுதி மக்களின் பிரயாணக் கஷ்டத்தைப்போக்க எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையிலும் தனியாரின் லொறிவண்டிகள் தாராளமாக உதவியளித்துவருகின்றன.

புகையிரத ஊழியர்களின் வேலை நிறுத்தத்தையடுத்துக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் பிரயாணிகள் பஸ்வண்டிகளிலேயே பிரயாணம் செய்துவருகின்ற போதிலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு லொறிகளிலும் பலர் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

வடபகுதியிலிருந்து வெங்காயம், மிளகாய், கருவாடு, மீன் வகைகளை கொழும்புக்கு ஏற்றிச்செல்லும் லொறிவண்டிகள் அப்பொருட்களை கொழும்பில் சந்தைப்படுத்தியதும் அங்கிருந்து திரும்பும்போது யாழ்ப்பாணப் பிரயாணிகளை ஏற்றி வருகின்றன. (நெல்-அ)

கழிவுப் பொருட்களில் 'விட்டமின்.பி12'

சென்னை, ஜன. 2

கழிவுப் பொருட்களில் இருந்து ''விட்டமின் பி-12'' மாத்திரைகளைத் தயாரிக்கும் முறையை சென்னை இந்திய தொழில்நுட்பக்கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இம் மருந்தின் மூலம் ''இரத்த சோகை'' நோயைக் குணப்படுத்த முடியும் என்று [illegible] பேராசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

சர்க்கரை ஆலையில் இருந்து பெறப்படும் கழிவு கரும்பு, மாட்டிறைச்சிக் கழிவு ஆகியவற்றை மூலப்பொருளாகக் கொண்டு இந்த மாத்திரை தயாரிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். [உ]

இந்தியா-155 இங். 4-136

கல்கத்தா, ஜன. 2

இந்தியா — இங்கிலாந்து 2-வது டெஸ்டின் 2-வது நாளான இன்றைய ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து 4 பேரை வசத்த விக்கட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றது. ரோஜர் [illegible] 31 ஓட்டங்களுடனும் காப்டன் கிரெக் 19 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர்.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 155 ஓட்டங்களை பெற்றது. பொப் வில்லிஸ் 27 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆஸி. 8 517

மெல்பேணில் நடைபெற்ற ஆஸ்திரேலிய - பாக் 2-வது

(6ம் பக்கம் பார்க்க)

பஸ் பிரயாணம் செய்தவர் பஸ்ஸிலேயே மரணம்

நெல்லியடி, ஞாயிறு

பஸ்வண்டியில் பிரயாணம் செய்த ஒருவர் அந்த பஸ் வண்டியிலேயே மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை இரவு யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு வந்த பஸ் வண்டி பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நின்றதும் பிரயாணிகள் யாவரும் இறங்கிய போது ஒரு பிரயாணி மட்டும் இறங்காது இருக்கவே அவரைத்தட்டிப்பார்த்த போது அவர் இறந்திருக்கக் காணப்பட்டாராம். இவர் [illegible] சேர்ந்தவர் எனத் தெரியவருகிறது.

இவரது மரணம் குறித்து விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. (அ)

……

1976ல் 975 கொலைகள்

கொழும்பு, ஞாயிறு

975 கொலைகள் 1976-ம் ஆண்டில் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. 1975-ம் ஆண்டைவிட இத்தொகை 35 கொலைகளால் குறைவானதாகும். (மா)

அன்பே உருவான அச்சக அதிபர்

அவருக்கு உரத்துப் பேசத் தெரியாது. எந்நேரமும் சிரித்த முகத்தான். என்றாவது எவருடனாவது அவர் சினங்கொண்டு பேசியதை நான் கண்டதில்லை. அவருடன் நெருங்கிப் பழகியவர்களும் இவ்வாறுதான் அநுபவம் பெற்றிருப்பார்கள் என்பது திண்ணம்.

அவர் தண்டோரா போட்டுத் தானம் வழங்கியது கிடையாது. ஆனால் அவரிடம் ஒன்றை நாடிச் சென்றவர்கள் முகமலர்ச்சியோடுதான் திரும்புவது வழக்கம். எந்த உதவியையும் காலநேரம் உணர்ந்து செய்வதில் அவருக்கு இணையானவர் இந்த உலகத்தில் கிடைப்பதரிது.

அன்பீனும் ஆர்வ முடைமை
அதுவீனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு

என்ற குறளுக்கு அவரோடு நான்கு நாட் பழகினாலும் பொருள் புரிந்துவிடும்.

கடந்த சில ஆண்டுகளாக அவர் நோயின்றி இருந்த நாட்கள் மிக அருமை. ஆனால் நோயின் காரணமாக அவரின் மனநிலை பாதிப்படைந்ததே இல்லை. முகமலர்ச்சியோ உற்சாகமோ குன்றி இருந்தார் என்று சொல்வதற்குமில்லை. அறிவு சுடர் விட்டுக்கொண்டிருந்தது அந்த முகத்தில்.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம் என்றும் நேர்மையும், திறமையும், சுத்தமும் அமைந்த அச்சுவேலை என்பதுதான் பொருள். யாழ்ப்பாணத்துப் பிரபல கல்லூரிகளின் தவணைப் பரீட்சை வினாத் தாள்களெல்லாம் அங்குதான் அச்சாகும். வினாக்கள் எவ்வகையிலும் வெளிச்செல்லா என்ற நம்பிக்கையைக் கல்லூரி அதிபர்களுக்குத் திடமாக ஏற்படுத்தியவர் அவர். சண்முகநாதன் அச்சகத்தில் வினாத்தாள்களை அச்சடிக்க முடியாத அளவு அங்கு வேலை குவிந்திருந்தாலும், அதிபர்கள் அவரைத்தான் மன்றாடிக்கொண்டிருப்பார்கள். அவரும் மனிதர் தானே? எந்த அளவுதான் வேலையைச் செய்வது? எனவே இவற்றைக் குறித்த நேரத்தில் கொடுப்பதில் அவர் மிகவும் கறார். எனவே அவர் மேலதிக வேலைகளை மறுக்கும் பொழுது அந்த மறுக்கும் பண்பே மேலும் மேலும் அவரை மன்றாட வைப்பதும் உண்டு. இனி இந்த நேர்மையையும், பண்பாட்டையும் யாரிடம் காணப்போகிறோம்.

வியாபாரத்திலே தந்திரம் என்பார்கள். அதற்கும் அவருக்கும் வெகுதூரம். வள்ளுவன் வழியில் "கொள்வதூஉம் மிகைகொளாது, கொடுப்பதூஉம் குறைகொடாது' என்ற கூற்றும் வியாபார தருமத்தைக் காணவேண்டுமென்றால் அவரை விட்டால் ஆள் இல்லை. இந் நூறு நோட்டிஸ் அச்சடிக்க வருபவர்களும் "இவ்வளவு எதற்கு? வீண் செலவு? இந் நூறு அடித்தாற் போதாதா?" என்று கேட்டு அறிவுரை வழங்கும் வியாபாரியை நீங்கள் கண்டிருக்கிறீர்களா? வேலை முடிந்த பொருளைக் கையளிக்கும்போது "பில் தாருங்கள்" என்றால் "இதற்கெல்லாம் ஆதாரம் எதற்காம்?" என்று அன்போடு கூறும் தொழிலதிபரை நீங்கள் கண்டதுண்டா? எத்தனை ஆண்டு சென்றாலும் கொடுத்த கடனைத் திருப்பக் கேளாது மேலும் கடன் கொடுக்கும் வணிகரை எப்போதாவது நீங்கள் சந்தித்ததுண்டா? இத்தனையும் ஒன்றுசேர்ந்த ஓர் உருவே அமரர் சி. சு. குமாரசுவாமி.

'வியாபார ரீதியிலே நட்டம் வரும்' என்று மற்றவர்கள் பொறுப்பேற்காத எத்தனையோ நூல்களை 'ரிஸ்க்' எடுத்து அச்சேற்றி அவை விற்பனையாகாதபோதும் அவை [illegible]. அவற்றை அச்சடிக்கக் கிடைத்தது எமக்கும் பெருமை. நட்டம் பற்றி அக்கறை இல்லை' என நினைக்கும் நிஷ்காமிய கர்மியான அமரர் சி. சு. குமாரசுவாமியை இழந்தமை சாதாரண நட்டமல்ல. சிறப்பாக நூலாசிரியர்களுக்கும், கல்லூரி அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இது ஈடுசெய்யமுடியாத இழப்பு.

அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

—சொக்கன்

பயிர்ச்செய்கைக் குழு உறுப்பினர்

நியமனப் பத்திரம் வழங்கவில்லையாம்

பண்டிதர் புகார்

யாழ்ப்பாணம், திங்கள்

''ஊர்காவற்றுறை தொகுதியில் பயிர்ச்செய்கைக் குழுக்கள் நிறுவப்படவில்லை. இதுகவலைக்குரிய விஷயம்'' இவ்வாறு தீவுப்பகுதி எம்.பி. திரு. கா. பொ. இரத்தினம் காணி விவசாய மந்திரி திரு. ஹெக்டர் கொப்பேகடுவவுக்கு அனுப்பியுள்ள அவசரத் தந்திச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நியமனப்பத்திரங்கள் வழங்குவதற்காக பயிர்ச்செய்கைக் குழு உறுப்பினர்களை வேலணை விவசாயசேவை நிலையத்திற்கு உதவிப்பணிப்பாளர் அழைத்திருந்தாகவும் ஆனால் நியமனப்பத்திரங்களை வழங்காமல் அவர்களைத் திருப்பியனுப்பியுள்ளதாகவும் எம். பி. தனது தந்தியில் மந்திரிக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

''இவ்வாறு விவசாயிகளை ஏமாற்றத்துடன் திருப்பியனுப்பியமைக்கு அரசியல்வட்டப்பிரமுகர் ஒருவரின் தலையீடுதான் காரணமென்று கூறப்படுவதாகவும்' விவசாயத் துறையிலும் தீவிரமாக அரசியலைப்புகுத்தாமல் முன்பு அழைக்கப்பட்ட விவசாயிகளின் வேதனையையும் வெறுப்பையும் நீக்கும் வகையில் அவர்களுடைய நியமனப் பத்திரங்களை உடனே வழங்கும்படி உதவிப் பணிப்பாளரைப் பணியுங்கள்'' என்று திரு. இரத்தினம் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

விவசாயிகளை அழைத்துப்பின்னர் வழங்குவதாகக் கூறி பல வாரங்களாகியும் இன்னமும் நியமனப்பத்திரங்களை வழங்காதிருப்பது எவ்வகையிலும் நீதியாகாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிர்வாகிகள்

சுழிபுரம், திங்கள்

பண்ணாகம் ஐக்கிய நாணய சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் பண்டிதர் அ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்- இ. அம்பாலதுரை, உப தலைவர்- இ. ஞானச்சந்திரமூர்த்தி, காரியதரிசி- இ. இராசராசா, உப காரியதரிசி- இ. தம்பிராசா, தனாதிகாரி- பா. விசுவலிங்கம். நிர்வாக உறுப்பினர்கள் ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

துப்புத் துலங்கவில்லை

நெல்லியடி, ஞாயிறு

வியாபாரிமூலை உபதபாலகத்தில் நடைபெற்ற திருட்டுக் குறித்து இன்னமும் துப்புத் துலங்கவில்லை.

இங்குநடைபெற்ற திருட்டுத் தொடர்பாக விசாரணை நடத்திய பருத்தித்துறைப் பொலிசார் விரல்அடையாள நிபுணர்களை அழைத்தும் படம்பிடிக்க முனைந்தபோது, விரல்அடையாளங்களைப் படம் எடுக்க முடியவில்லையெனப் பொலிசார் தெரிவித்தனர். (அ)

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. எம்/14424

அந்தோனிப்பிள்ளை இதினியாம்பிள்ளை,
கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை
வாதி

எதிராக

1. ஆறுமுகம் திருநாவுக்கரசு பெண்
2. கண்ணம்மா, புளியங்கூடல், ஊர்காவற்றுறை.
3. மாணிக்கம் தவசேகரராசா, சுருவில், ஊர்காவற்றுறை.
4. யோகிம்பிள்ளை யாக்கோப்பு, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் M. B. 14424-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு தை மாதம் 27-ந் திகதி (27-1-1977) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதலுக்கு ரூபாய் 8280/-ம், மேலும் 5000/- ரூபாவுக்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டியும் வழக்கு அமைந்த திகதியான 1974-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியான 1975-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ந் திகதிவரையுமான வட்டியும், அதன்பின்னர் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5%வட்டியும் வழக்குச்செலவு ரூபா 685-45(இதில் நடைபெற்ற செலவு ரூபா 436-35 நடைபெறவேண்டிய செலவு ரூபா 138-85 மேலதிக கமிஷனர் செலவு ரூபா 110-25 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இதை ''குமியந்தனை வயல்'' நெ. பர. 33. இதில் இரு துண்டுகள் நீக்கி மிகுதியான தெ.பர.நெ. 13லுள்ள 3 1/2. இதற்கெல்லை கிழக்கு மாணிக்கம் கைக்கொண்ட யோகம்மாவினுடையதும். மேற்கு கணபதிப்பிள்ளை முருகேசுக்குரிய இதன்முன் நீக்கப்பட்ட ஆதனம், வடக்கு வீதி, தெற்கு முருகேசு பெண் இராசம்மாவுக்குரிய ஆதனம் இதடங்கலும் இதற்கு சேர்ந்தவைகளும்.

2. மேற்படி இதை ''உப்பம்'' நெ. பர. 7, 1/16 கல் வீடும் கிணறும் செய்பயிர் வகைகளும். இதற்கெல்லை கிழக்கு குமாரவேலு பெண் மகேஸ்வரியினுடையதும் வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு குழந்தைவேலு செல்லத்துரைக்கும் அம்பலவாணர் பெண் பார்வதிக்கும் உரிய ஆதனங்கள்.

ஏ. ப பி. எதிர்மன்னசிங்கம்,
வெந்தீஸ் கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

107, மெயின் ஸ்ரீட்,
யாழ்ப்பாணம்,
3-12-76.

5156

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: MB/14445

விக்டர் பீனசடன் மாட்டினும் பெண்
பேபி திரேசா இருவரும்
452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வழக்காளி

எதிராக

மரியாம்பிள்ளை யேம்ஸ்-ம் பெண்
திரேசமலர் யேம்ஸ் இருவரும்
29, புதுரோட் ஒழுங்கை, கொய்யாத்தோட்டம்,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் MB/14445-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னும் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1977-ம் ஆண்டு தை மாதம் 25-ந் திகதி (25-1-77) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

ரூபா 3,315/- 1-1-74 தொடக்கம் 7-3-75 வரைக்கும் ரூபா 3000/-க்கு 18%வட்டியும் அதன்பின் முழுத்தொகை இறுக்கும் வரைக்கும் 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 554-95 சதம் (கொடுக்கப்பட்ட தொகை ரூபா 500/-)

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பிரிவு கண்டிக்குளி இதை ''அத்தியடிப்புலம்'' நிலப்பரப்பு ஒன்றும் குழி 8½ என உத்தரவு பெற்ற உவைற்றா T. கந்தையா வால் 1963-ம் ஆண்டு தை மாதம் 16-ந் திகதி 1216-ம் இலக்கம் கொண்ட பட்டத்தில் லொட் 2 எனக் குறிக்கப்பட்டதும் நிர்ணயிக்கப்பட்டதுமான ஆதனம். இதில் கல்வீடும் கிணறும் மலசலகூடமும் இனமும் பயிர்களும் கொண்டது. தற்பொழுது யாழ். நகரசபை மதிப்பு இலக்கம் 35/2, பழையபூங்கா வீதியிலுள்ள இவ்வாதனத்திற்கு எல்லை கிழக்கும் மேற்கும் யோசேப் அம்பிறட்டினதும் மேரி மாகிறட்டினதும் வடக்கு யோசேப் மரியாம்பிள்ளையின் பெண் மேரியின் ஆதனம். தெற்கு ரோட். இவ்வெல்லைக்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

சி. செ. பாலலிங்கம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

அரசடி வடக்கு,
வட்டுக்கோட்டை.
21-12-76.

5147

வரிவிளம்பரம்

தேவை

ரோரு மோட்டார் வாகன சேவிஸ் நிலையத்திற்கு மோட்டார்வாகனங்கள் சேவிஸ் செய்வதில் அநுபவமுள்ளவர்களும், வேலை பழக விரும்புவோர்களும் தராதரங்களுடன் 14-1-77க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். இளைஞர்கள் விரும்பத்தக்கது. த ரோரு லிமிட்டெட். 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

5167

53, ஸ்ரான்லி வீதி, கமலா இன்டஸ்றீஸ் நிறுவனத்திற்கு ஆங்கில அறிவு மிகுந்த நிர்வாக உத்தியோகத்தர் தேவை. ஆண்-பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மாதாந்தம் தகுந்த சம்பளம் கொடுக்கப்படும். கடிதமூலமாத்திரம் ஒரு வார காலத்தினுள் கல்வித்தகைமை, விலாசம், வயதுடன் விண்ணப்பிக்கவும். தொலைபேசி: 7652. 5163

விற்பனைக்கு

தெல்லிப்பழை நாசன் ஸ்ருடியோ படம் எடுக்கும் உபகரணங்கள் தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். நாசன் ஸ்ருடியோ, தெல்லிப்பழை.

5150

கல்வி

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் பாடசாலையிலிருந்து சென்ற [illegible] மரவேலை, விவசாயம், ஆட்டக் [illegible], [illegible], தையல் போன்றவற்றில் பயிற்சி வகுப்பு ஆரம்பமாகிறது. விரும்பும் மாணவர்கள் கல்லூரி அதிபருக்கு 10-1-77க்கு முன் மனுப்பண்ணவும். வி. நடராசா, அதிபர்.

5166

வகுப்புகள்

பல்கலைக் கல்விக்கழகம் (M. E. I) - H. N. C. E, N.C.G.E. கணித, விஞ்ஞான ஆங்கில பாடங்கள் 5-1-77 மு. ப. 9-30-க்கு ஆரம்பமாகின்றது. ஏனைய வகுப்புகளின் பகல்/மாலை நேர வகுப்புகள் 9-1-77 காலை 9-30-க்கு யாழ்ப்பாணத்தில் 508, கஸ்தூரியார் வீதியிலும் (யாழ். இந்து விநாயகர் மைதானம் கிழக்குப்பக்கம்), வேலணையில் மத்திய மகாவித்தியாலயத்துக்கு முன்பாகவும் ஆரம்பமாகின்றன. பெயரைப் பதிவு செய்க. பிரதம பதிவாளர், 508, கஸ்தூரியார் வீதி, வண்ணார்பண்ணை. 5162

க. பொ. த. (சா. த.) விஞ்ஞானம், வர்த்தகம், கலை, N. C. G. E, H. N. C. E. தட்டெழுத்து, சுருக்கெழுத்து (தமிழ் / ஆங்கிலம்) விசேட வகுப்புகள். ஆங்கில வகுப்புகளுக்கு இப்போது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். ஆரம்பம் 8-1-77.

5148

ST. JOHN'S COLLEGE
JAFFNA

Wanted - Graduate with Mathematics to teach in the H. N. C. E. and G. C. E., Advanced Level Classes. Please apply before 10th January 1977.

Principal
5153

பாலஸ்தீன ராஜ்யம் அமைக்கும் சதாத்தின் யோசனை

இஸ்ரேல் நிராகரித்தது?

டெல்அவிவ் ஜன. 2

ஜெருசலேமுக்கும் ஜோர்டானுக்கு மிடையில் பாலஸ்தீன ராஜ்யம் அமைக்கலாமென்ற எகிப்திய அதிபரின் யோசனையை இஸ்ரேல் நிராகரித்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர் காலத்தில் அமையவிருக்கும் பாலஸ்தீனியராஜ்யம் எந்தவிதத்திலாவது ஜோர்டானுடன் தொடர்புடையதாக இருக்கவேண்டுமென்று எகிப்திய அதிபர் சமீபத்தில் யோசனை தெரிவித்திருந்தனர். இஸ்ரேலுடைய எல்லையுடன் இணைந்ததாக பாலஸ்தீனிய ராஜ்யம் அமைப்பது இஸ்ரேல் மீது தொடர்ந்து எதிர்காலத்தில் தாக்குதல் நடத்துவதற்கு வாய்ப்பாகவே அமையுமென்பதால் இந்த யோசனையை நீண்டகாலமாகவே இஸ்ரேல் எதிர்த்துவந்திருக்கிறது.

இதேசமயம் ஜோர்தானின் மேற்குக்கரைப்பகுதியில் உத்தேசபாலஸ்தீனிய ராஜ்யம் அமைக்கலாமென்ற யோசனைக்கு அரபுக்கள் பெரும் கூடமுழுமையாக ஆதரவு தெரிவிக்கவில்லையென்றும் செய்திகள் கூறுகின்றன.

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் இந்தயோசனையை இஸ்ரேல்முற்றாக நிராகரித்து விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கென்னடி, கிங் கொலை பற்றிய புதிய தடயம்

வாஷிங்டன், ஜன. 2

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடி, அமெரிக்க நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர்கிங் ஆகியோரின் கொலைகளுக்கான காரணங்களை அறிந்து கொள்வதற்கான புதிய தடயங்கள் கிடைத்துள்ளதாக மக்கள் பிரதிநிதிகள் சபைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த இரண்டு கொலைகளுக்கும் மர்மகாரணங்களை அறிவதற்கு வழி காட்டக் கூடிய புதிய தடயங்களைக் கண்டு பிடிப்பதற்கு இக்கொலைகள் பற்றி ஆராய்ந்த மத்திய உளவு இலாகா சமஷ்டி துப்பறியும் பகுதி ஆகியவை தொடர்ந்து முயற்சிசெய்யத்தவறிவிட்டன என்று இந்தக் குழு தெரிவித்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்டுகள் 70 பேர் கைது

புதுடில்லி, ஜன. 2

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எழுபதுபேர் நேற்றும் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். வாழ்க்கைச் செலவுஉயர்வை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இயக்கம் காரணமாகவே இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக கம்யூனிஸ்ட் கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தர பிரதேசத்தில்தான் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் இவர்கள் தடுப்புக் காவலில் குறுகிய காலத்துக்கு வைக்கப்படுவார்களென்றும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் காலவரையறையின்றி சிறையில் வைக்கப்படுவார்களென எதிர்பார்க்கப்படவில்லையென்றும் கட்சிவட்டாரங்கள் கருதுகின்றன.

காங்கிரசின் நேசக்கட்சியான கம்யூனிஸ்ட் கட்சிக்கும் காங்கிரஸ் கட்சிக்குமிடையில் சஞ்சேகாந்தியின் ஐந்து அம்சத்திட்டம் சம்பந்தமாக சமீபத்தில் வாய்ச்சண்டை ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க குடியரசுடன் சேர்க்கப்படும்

கொலராடோ, ஜன. 2

கரீபியன்தீவான பியூர்ட்டோ ரிக்கோவை ஐக்கிய அமெரிக்காவுடன் இணைக்கவேண்டும் என காங்கிரஸ் சபையிடம் வற்புறுத்தப்போவதாக அமெரிக்க அதிபர் போர்ட் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் 51வது குடியரசாக இதுசேர்த்துக் கொள்ளப்படும். அமெரிக்காவுக்கும் இப்பொழுது சுயஆதிபத்தியமுள்ள காமன்வெல்த் நாடாகவிருந்துவரும் பியூட்டோரிக்கோ சேர்த்துக்கொள்ளப்பட்டதின்பின் ஏனைய மாகாண பிரஜைகளைப் போலவே இதன் பிரஜைகளும் சம உரிமையுடையவர்களாய் இருக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ரொடீஷியப் பிரச்னை:

ஸ்மித்துடன் றிச்சார்ட் நடத்திய பேச்சுவார்த்தை

சாலிஸ்பரி, ஜன. 2

ரொடீஷியப் பிரதமர் திரு. இயன் ஸ்மித்துடன் ஜெனீவா சமாதான மாநாட்டுத் தலைவர் திரு. ஐவர் றிச்சார்ட் ரொடீஷிய விவகாரம் குறித்து தொடர்ந்து இரண்டரை மணித்தியாலங்கள்வரை நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் திரு. றிச்சேட்டின் மனநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று சாலிஸ்பரியிலிருந்து வெளியாகிய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

திரு. றிச்சார்ட் திரு. ஸ்மித்துடன் மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்துவாரா எனக் கூறமுடியாதிருக்கிறது என்று அவ்வறிக்கைகள் மேலும் தெரிவித்தன.

திரு. றிச்சார்ட் இதனையடுத்து தென்னாபிரிக்க பிரதமர் திரு. வோஸ்டோரைச் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

ஆபிரிக்க தேசிய வாதத்தலைவர் திரு. முஸரேவாவுடனும் திரு. றிச்சார்ட் பேச்சுவார்த்தை நடத்துவார்.

இதேவேளை, ரொடீஷிய விவகாரம் குறித்து எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்துடன் மற்றொரு ஆபிரிக்கத் தேசியவாதத் தலைவரான திரு. நிக்கோமா பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளின் விபரங்கள்எதுவும் வெளியிடப்படவில்லை.

திரு. றிச்சார்ட் ஸாம்பியா அதிபர் திரு. கெனத் கௌண்டாவுடன் நேற்று மூன்றாவது பேச்சுவார்த்தை நடத்தினார்.

ரொடீஷிய விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்படுவதற்குத் தாம் பூரண ஒத்துழைப்பு நல்குவதாக திரு. கௌண்டா திரு. றிச்சார்டிடம் உறுதியளித்துள்ளார். (ஸ்ரீ)

மின்னொளி ஏற்றுவிழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

ஈழத்தில் கிறிஸ்தவத்தைப் பரப்புவதில் முன்னோடியாக விளங்கிய மறைந்த அருட்திரு ஜோசவ்வாஸ் அடிகளின் சிலை ஒன்று சில்லாலையில் நிறுவப்பட்டுள்ளது. இச்சிலைக்கு மின் ஒளி ஏற்றும் வைபவம் சில்லாலை ஜோசவ்வாஸ் இளைஞர் சங்கத்தின் சார்பில் கடந்த வாரம் நடாத்தப்பட்டது. பங்குக்குரவர் அருட்திரு ஜுவான்ஸ் அடிகள் மின்னொளியை ஆரம்பித்துவைத்துச் சிறப்புரையாற்றினார்.

தலைகாவலர் க. கனகராஜாவினால் இந்த மின்விளக்கு அன்பளிப்புச்செய்யப்பட்டது.

(ஆ)

புலோலியில் மண்ணெண்ணை விநியோகம்

நெல்லியடி, ஞாயிறு

புலோலி ம. நோ. கூ. சங்கம் இப்பகுதியில் நிலவும் மண்ணெண்ணைத் தட்டுப்பாட்டினைப் போக்கிவருகிறது.

இச்சங்கத்தின் கோரிக்கை யாவும் கொழும்புக்கு அனுப்பப்பட்டு. அங்கிருந்து நூற்றுக்கணக்கான பீப்பாக்களில் மண்ணெண்ணை ஏற்றிவரப்பட்டு, பாவனையாளர்களுக்குப் போதிய மண்ணெண்ணை விநியோகிக்கப்பட்டுவருகிறது.

நியமனம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபை நூல்நிலைய உதவியாளராக சபையின் வரி வசூலிப்பாளராக கடமையாற்றும் ஆ. சிவானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நூல்நிலையம் இவ்வாண்டு முதல் செயல்படவுள்ளது.

(ஆ)

கார்ட்டரின் திட்டம்

வாஷிங்டன், ஜன. 2

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. ஜிம்மி கார்ட்டர் தமது பொருளாதாரத் திட்டத்தை இவ்வாரத்திற்குள் பூர்த்தி செய்துவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா கைத்தொழில் துறையில் முன்னரிலும்பார்க்க முன்னேற்றம் கண்டுள்ளது என்று வாஷிங்டன் அறிக்கை ஒன்று கூறுகிறது. (ஸ்ரீ)

பிரிட்டனின் பொருளாதார எதிர்காலம்

லண்டன், ஜன. 2

பிரிட்டனுக்கு 1977-ம் ஆண்டு பொருளாதார வகையில் நம்பிக்கை எதையும் வழங்கமுடியாது என்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. ஜேம்ஸ் கலகன் தமதுபுதுவருடச்செய்தியில் கூறியிருக்கிறார்.

பிரிட்டனில் அண்மையில் தேர்தல் நடத்தப்படமுடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பழங்கால நாணயங்களில் தமிழ்

சென்னை, ஜன. 2

சோழ, நாயக்க, நவாப் மன்னர் காலத்து செப்பு நாணயங்கள் புதைபொருள் ஆராய்ச்சி நிலையத்தினரால் கண்டுபிடிக்கப்படவுள்ளன.

சிறியஅளவிலான இந் நாணயங்களில் தமிழ், தெலுங்கு, உருது ஆகிய மொழிகள் காணப்படுகின்றன.

இடிந்த அரண்மனை ஒன்றும் இந்நிலையத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

சிதம்பராவுடன் இருபாடசாலைகளை இணைக்கக் கோரித் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வை சிவகுரு வித்தியாசாலையையும் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையையும் சிதம்பராக் கல்லூரியுடன் இணைத்தல்வேண்டும். அதற்குமுன் சிவகுரு வித்தியாசாலையில் ஆரம்பதரத்திற்குமேல் கல்வி பயிலும் மாணவர்களை உடனடியாக சிதம்பராக் கல்லூரியில் சேர்த்தல்வேண்டும் என்று கூறும் தீர்மானங்கள் அண்மையில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்டன.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு. ஐ. நவரத்தினம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

வல்வெட்டித்துறையிலுள்ள பிரபல உயர் கல்வி நிலையமான சிதம்பராக் கல்லூரியின் நிர்வாகத்தின்கீழ் வல்வை சிவகுரு வித்தியாசாலையையும், இணைக்கவேண்டுமா இல்லையா என்ற கருத்தரங்கை வல்வை சமூகசேவா நிலையங்களும், படிப்பகங்களும், வல்வையின் பொதுப்பணி மன்றங்களும் கூட்டாகச் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தன.

வல்வை மக்கள் அறிவாளிகள், தீர்க்கதரிசிகள் என்பதை இக்கருத்தரங்கின்மூலம் காட்டிவிட்டனர். இதற்கு முன்னோடியாகத் திகழ்ந்த வல்வை இளைஞர்களுக்கும், இக்கருத்தரங்கை ஒழுங்கு செய்த வல்வை சமூகசேவா நிலையம், வல்வை விக்னேஸ்வரா சனசமூக நிலையம், ஆதிசக்தி படிப்பகம், கணபதி படிப்பகம் ஆகியவற்றின் நிர்வாகிகளுக்கும், வல்வைப் பொதுப்பணி மன்றத்தினருக்கும்தான் நாம் நன்றி கூறவேண்டும். என்று நகரசபைத் தலைவர் திரு. ஐ. நவரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டார்.

பருத்தித்துறைத் தொகுதித் தேசியப் பேரவை உறுப்பினரும் சட்டத்தரணியுமான திரு. க. துரைரத்தினம் கருத்தரங்கில் பேசும்போது, ''வல்வை மாணவர்களுக்கு ஒரு உறுதியானதும், நம்பிக்கையானதுமான கல்வி வசதிகளை எமது ஊரிலேயே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமானால் இம்முயற்சியை நாம் ஆதரிக்கத்தான் வேண்டும். ஏற்கனவே ஒரு சரித்திரப்பிரசித்தி வாய்ந்த தமிழர் கூட்டணி என்ற இணைப்பை ஏற்படுத்திய வல்வெட்டித்துறை மக்கள், மீண்டும் இப்படியான ஒரு இணைப்பையும் மேற்கொண்டது பாராட்டப்படக்கூடியது'' என்று கூறினார்.

மேற்படி மூன்று பாடசாலைகளையும் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கென ஒரு இணைப்புக் குழுவும் சபையினரால் தெரிவு செய்யப்பட்டது. இவ்விணைப்புச் சம்பந்தமாக கல்வி அமைச்சு, வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர்களுக்கும் இக்குழுவினரால் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. வேறு பலரும் கருத்துரைகள் வழங்கினர்.

லக்ஷ்மி நாராயண சுவாமிகள் தமிழ் நாடு பயணம்

யாழ்ப்பாணம், திங்.

லக்ஷ்மி நாராயணசுவாமிகள் நேற்று தமிழ்நாட்டுக்குப் புறப்பட்டிருக்கிறார்.

முதலில் திருச்சி மலைக்கோட்டைப்பிள்ளையார்கோவிலுக்குப் போய் சுவாமிதரிசனம் செய்துகொண்டு மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், மற்றும் திருப்பதி முதலாம் தலங்களையும் அவர் தரிசிக்கவிருக்கிறார். பின்னர் அறுபடை வீடுகளையும் தரிசித்தபின்னர் மலேஷியாபயணமாவார்.

மலேஷியாவில் பட்டகேஸ் குகை ஸ்தலத்துக்கு யாத்திரை செய்வது இவரது முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் முருகன்மீது அவர் பாடியுள்ள நூல் முருகன் ஆலயம் ஒன்றில் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் காமகோடி ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகளை அவர் அழைப்புக்கிடைத்ததால் தரிசிக்க விரும்பங்கொண்டுள்ளார் லக்ஷ்மிநாராயணசுவாமிகள்.

சிலதினங்களுக்குமுன் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வருகைதந்திருந்த சுவாமிகள் பத்திரிகையின் வளர்ச்சிகுறித்து ஆசிகூறிச் சென்றார்.

நத்தார் பண்டிகையை சிறையில் கொண்டாடினர்

லுஸாகா, ஜன. 2

அண்மையில் வேலைநிறுத்தஞ் செய்ததற்காக அவசரகால சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 900 ஆபிரிக்க போக்குவரத்து சேவைத் தொழிலாளர்கள் தமது நத்தார் பண்டிகையை சிறையில் கொண்டாடினர்.

ஸ்மித் ஆட்சி கடைப்பிடிக்கும் அடக்குமுறைக் கொள்கைக்குக் கண்டனம் தெரிவிக்கும் பொருட்டே மேற்படி தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். தொழில் நிலைமைகள் மேம்படுத்தப்படவேண்டுமென்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக இருந்தது.

கோரிக்கைகளைக் கைவிட்டு வேலைக்குத்திரும்புமாறுதொழிலாளர்கள் நிர்ப்பந்திக்கப்பட்ட போதிலும் தொழிலாளர்கள் தமது நிலைப்பாட்டினை விட்டுக் கொடுக்கவில்லை.

இந்த 900 தொழிலாளர்கள்மீதும் வழக்குத்தொடர ஸ்மித்தின் அரசு முடிவுசெய்துள்ளது. (ஸ்ரீ)

"90 லட்சம் கிராம மக்கள் மக்கள் வங்கியில் கடன் பெற்றுள்ளனர்"

வண்ணார்பண்ணை, ஞாயிறு

'இலங்கையில் இதுவரை 187 மக்கள்வங்கிக் கிளைகள் மக்களின் வசதிக்கெனத் திறக்கப்பட்டுள்ளன. இவற்றில் 140 கிளைகள் கிராமப்புற மக்களின் வசதிக்காக திறக்கப்பட்டுள்ளன. இன்றைய மக்கள் அரசின் சோஷலிசக் கொள்கையின்கீழ் இத்திட்டம் செய்யப்பட்டு வந்துள்ளது. பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் திட்டத்தின்கீழ் பதினைந்து ஆண்டுகளுக்குமுன் மக்கள்வங்கி ஆரம்பமாகி இன்று சாதாரண மக்களுக்கு உதவிபுரியும் ஒரு ஸ்தாபனமாகத் திகழ்கின்றது'

இவ்வாறு மக்கள்வங்கியின் கிளையொன்றை பண்ணையில் திறந்துவைத்த பின் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய மக்கள் வங்கியின் பொதுமுகாமையாளர் திரு. விவேரா தெரிவித்தார். மக்கள்வங்கியின் தலைவர் திரு. அபயவர்த்தன தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பொதுமுகாமையாளர் திரு. விவேரா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'இதுவரையும் 90 லட்சம் கிராமப்புற மக்கள், மக்கள் வங்கியில் கடன்பெற்றுள்ளனர். 100 லட்சம் மக்கள்வங்கியில் கணக்கு வைத்துள்ளனர். முதலீட்டுச் சேமிப்புக் கணக்குத் திட்டத்தின்கீழ் 25,000 ரூபாவரை வீடற்றவர்கள் வீடு கட்டுவதற்கான கடன்கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

புதிய திட்டம்

'மக்கள்வங்கி கிராமவங்கிகளில் அபிவிருத்தி அதிகாரிகளை நியமித்துள்ளது. சாதாரண மக்களுக்கும் சிறிய வியாபாரிகளுக்கும் பிணையின்றி கைமாற்றுக்கடன் கொடுப்பதற்காக இந்த அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசின் சோஷலிச நடவடிக்கையில் இக்கைமாற்றுக் கடனும் ஒன்றாகும். சாதாரண சந்தை வியாபாரிகள்கூட கைமாற்றுக்கடனைப் பெறுவது தமது வியாபாரத்தை வளம்படுத்த இத்திட்டம் உதவிபுரிகின்றது. முந்திய காலங்களில் பெரிய முதலாளிகள்தான் வங்கிகளின் தொடர்பு கொள்ள முடிந்தது. சாதாரணமக்கள் தமது நகைகளை உடமைகளை அடகுபிடிப்பவர்களிடமும் பெரியசெட்டிமாரிடம் செல்லவேண்டியிருந்தது. இன்று அந்தநிலை இல்லை. மக்கள்வங்கியின் எந்தக் கிளையிலும் மக்கள் அடைவுபிடிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மக்கள்வங்கிகூட்டுறவு இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. மக்களிடத்தில் சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திய வங்கி மக்கள்வங்கியே. இதை உருவாக்கிய அரசாங்கம் இந்த மக்கள் அரசாங்கமே'

மக்கள்வங்கியின் தலைவர் திரு. அபயவர்த்தன பேசுகையில் கூறியதாவது:

'நாட்டின் அபிவிருத்திவேலைகளையும் உற்பத்திகளையும் விஸ்தரிக்கும் பணியில் மக்கள்வங்கி ஈடுபடுகிறது. யாழ்ப்பாணத்தில் இவ்வங்கியின் 20 கிளைகள் இதுவரை திறக்கப்பட்டுள்ளன. வடக்கின் நன்மைகருதி இந்த அரச மக்கள்வங்கியின் மூலம் பல பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளது. இதனால் வடக்கு இன்று சிறப்பும் பெற்றுள்ளதை நாம் காண முடிகிறது.

பண்ணை வஸ்திராலயத்திற்கு அருகாமையில் பண்ணைக் கிராமத்திற்கான இந்த மக்கள்வங்கிக் கிளை திறந்துவைக்கப்பட்டது.

இத்திறப்புவிழா வைபவத்திற்கு வந்த அமைச்சர் குமாரசூரியரை பண்ணை மக்கள் வரவேற்றனர். பண்ணை அம்மன் கோவிலிலிருந்து பிரசாதம் பெற்று அமைச்சர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். பண்ணை தபாற்நிலையத்தின்முன் கிளிநொச்சி தபால் அத்தியட்சகர் தலைமையில் தபால்நிலைய ஊழியர்கள் அமைச்சரை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து பண்ணை கைத்தொழில் விளைவுப்பெருக்கச்சங்க உறுப்பினர்கள் வரவேற்றனர்.

அமைச்சர் மேளவாத்தியங்கள், குதிரைநடனம் ஆகியவற்றுடன் ஊர்வலமாக அழைத்து வந்தபோது மக்கள்வங்கி இத்தலைவர், மக்கள்வங்கி அதிகாரிகள், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. பேரேரா ஆகியோரும் கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். [அ]

தெல்லிப்பழையில் கூப்பனுக்கு ஒன்றரை ரூ. மா

இன்று விநியோகம்;

நாளையும் கடைகள் திறப்பு

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு இன்று முதல் கூப்பன் ஒன்றுக்கு ஒன்றரை ரூத்தல் மா வீதம் வழங்கப்படுகிறது. இதனால் கடந்த வாரம் இப்பகுதியில் நிலவிய கடும் தட்டுப்பாடு நீங்கிவிடுமென நம்பப்படுகிறது.

இப்பகுதியில் நிலவிய மா, மண்ணெண்ணெய் ஆகியவற்றின் தட்டுப்பாட்டை நீக்குவதற்குத் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. த. பூ. முருகையாவும், பொது முகாமையாளர் திரு. இ. நவரத்தினமும் எடுத்த துரித நடவடிக்கையின் பயனாக இன்று முதல் கூப்பன் ஒன்றுக்கு ஒன்றரை ரூத்தல் மாவும், ஒரு பர்மிட்டு அட்டைக்கு ஒரு போத்தல் மண்ணெண்ணெயும் விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவசாய அட்டையுள்ளவர்களுக்கு விவசாய அட்டை ஒன்றுக்கு ஒரு கலன் மண்ணெண்ணெய் விநியோகிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. விவசாய அட்டை இல்லாதவர்கள் கீரிமலையில் உள்ள விவசாயச் சேவை நிலையத்தில் கடிதம் பெற்றுவந்தாலும் ஒரு கலன் மண்ணெண்ணெய் கொடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை போயா விடுமுறையாக இருந்தபோதிலும் மக்களின் உணவு, எண்ணெய்க் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும் வகையில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளைத் திறந்து வியாபாரம் செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. (அ)

சைவப் பிரவேச பெருவிழா

யாழ்ப்பாணம், திங்.

கைதடி இலங்கை சைவ ஆதார இல்லச் சைவப்பிரவேசப்பெருவிழா இம்மாதம் 14-ம் தேதி வெள்ளிக்கிழமை இல்ல மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகவிருக்கிறது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கெ. பாலபிட்டணர் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் 'முக்திக்குத் தீட்சை' என்பதுபற்றி முன்னாள் பரமேஸ்வராக்கல்லூரி அதிபர் சைவப்பெரியார் திரு. சு. ஞானப்பிரகாசம் உரையாற்றுவார். யாழ்ப்பாணம் நீதவான் திரு. க. வை. நவரத்தினம் தொடக்கவுரை நிகழ்த்துவார். 'பொங்கலோ பொங்கல்' என்னும் தலைப்பில் சட்டத்தரணி திரு. இராஜஇராஜேஸ்வரன் தங்கராசாவும், 'சிவசக்தி' என்பது குறித்து ஆசிரிய ஆலோசகர் திரு. ச. பரநிருபசிங்கமும் உரையாற்றுவர்.

யாழ்ப்பாண நன்னடத்தை அதிகாரி திரு. பொ. சண்முகராசா, மூதூர் நீதவான் திரு. க. ஞானச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகள் வழங்குவர்.

தொழிலதிபர் திரு. இ. அரசரத்தினம் 'ஆண்டில் ஒருநாள் உணவுவழங்கும் திட்டத்தை, ஆரம்பித்துவைப்பார்.

இல்லமாணவிகள் மங்கள இசைபாடுவர்.

அன்றுகாலை 6 மணிக்குத் தீட்சைபெறுவோர் கைதடிப் பிள்ளையார் கோவிலிலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டு சைவக்குருமாரால் சைவப்பிரவேசதீட்சைவழங்கப்படும். ...... [மா]

"வயதெல்லையை நீடிக்கவும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுகாதார இலாகாவில் பரிசாரகர் பணியாற்றுவோரிடமிருந்து தாதிப்பயிற்சிக்கு விண்ணப்பிப்பதற்கான வயது எல்லையை நீடிக்குமாறு அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்க யாழ். மாவட்டக் கிளையின் பொதுச் செயலாளர் திரு. வெ. பெருமாள் தந்திமூலம் சுகாதார இலாகா ஆணையாளரைக் கோரியுள்ளார்.

அக்கோரிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''சுகாதார இலாகாவில் கடமையாற்றும் கல்வித்தராதரம் 7-ம் வகுப்பில் சித்தி அடைந்த 40 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் பரிசாரகர்களிடமிருந்து மாணவத்தாதிகள் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சுற்றுநிருபத்தில் கூறப்பட்டுள்ள 40 வயது எல்லை வழமைக்கு மாறானது ஆதலால் வயதெல்லையை 45 ஆக உயர்த்துமாறு கேட்டுக் கொள்கிறேன். (உ-அ)

ஒரே கட்டிடத்தில் ஐந்து அலுவலகங்கள்

வண்ணார்பண்ணை, ஞாயிறு

யாழ்ப்பாணத்தில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக கட்டப்பட்ட தேசிய வீடமைப்பு இலாகாவின் இருமாடிக் கட்டிடத்தில் இம்மாத முதல் ஐந்து அலுவலகங்கள் இயங்கவிருக்கின்றன. தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர் திரு. எம். இராஜரத்தினம் இவற்றை வாடகைக்கு இருத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வனபரிபாலன இலாகா அலுவலகம், கைத்தொழில் இலாகா அலுவலகம், மதிப்பீட்டிலாகா அலுவலகம் ஆகியன இம்மாதம் முதல் இங்கு வந்துள்ளன. தேசிய வீடமைப்பு இலாகா அலுவலகம் கடந்த மாதமே இக்கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.



உறுதியான உறவு

திடமானது, உறுதியானது
ஸ்திரமானது அது நாங்கள்தான்
35 வருடங்களுக்கு மேலான அனுபவ
முள்ள த பினன்ஸ் ஸ்தாபனத்தார்
மட்டுமே, 13% வருமானத்தைப
பெறமுடியுமென திடகாத்திரமாகக
கூறமுடியும்

த பினன்ஸ் கொம்பனி லிமிட்டட
3 வது மாடி, செலின்கோ மாளிகை
கொழும்பு 1 தொலைபேசி 23861 - 23862
கிளை அலுவலகம்,
191, மின்சார நிலைய விதி யாழப்பாணம்

Rio (Jaffna)
Today only
Hercules in the Centre of the Earth
From 5-1-77
The long awaited
OUT OF SEASON

ராணி [யாழ்-நகர்]
ஃ ஜெய்சங்கர் ஃ லக்ஷ்மி
ஃ ஜெயா ஃ முத்துராமன்
நடித்த
தினசரி 4 காட்சிகள்
கனிமுத்து பாப்பா

இன்று முதல்
ராஜா யாழ்ப்பாணம் (தினசரி 4 காட்சிகள்)
உதயகுமார் - சரோஜாதேவி - வீரப்பா
நடித்த
யானைப்பாகன் புதியபிரதி
(பயங்கரச் சண்டைக்காட்சிகள்
குதிரையோட்டம் நிறைந்தபடம்)

றீகல் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 & 9-45
என். எஸ். கிருஷ்ணன் மதுரம்
பி. பானுமதி - எஸ். வி. சகஸ்ரநாமம்
நடித்த
நல்லதம்பி
கதைவசனம் - அறிஞர் சி. என். அண்ணாதுரை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
முத்துராமன்
நடித்த
ஒரு தாய் மக்கள்
[புத்தம் புதிய பிரதி]

ஸ்ரீதர் (யாழ். நகர்) மனோகரா
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - மஞ்சுளா
(இருவேடங்களில்) லதா-சந்திரகலா
நம்பியார், அசோகன்
நடிக்கும்
உலகம் சுற்றும் வாலிபன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா—ஜெயசுதா—நாகேஷ்
நம்பியார் நடித்த
மன்னவன் வந்தானடி
(ஈஸ்ட்மன் கலர்)

லிடோ [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் போன்: 7693
வெற்றிகரமான 106வது தினம்
சிவாஜி — ஜெயலலிதா — மஞ்சுளா
நடித்த
அவன்தான் மனிதன்

வட இலங்கைச் சங்கீதசபை பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம் வட இலங்கைச் சங்கீதசபை நடாத்திய 1976-ம் ஆண்டுச் சங்கீதப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்துள்ளன. சித்தியடைந்தோர்களின் விபரம் வருமாறு:

முதலாம் பகுதி

மானிப்பாய்

முதலாம் பிரிவு

பாட்டு: வசந்தி நடராசா, சேந்தில் செல்வி செல்லத்துரை, சுகந்தினி மயில்வாகனம். வயலின்: [illegible] தம்பிராசா, வீணை: [illegible] ஆறுமுகதாசன்.

இரண்டாம் பிரிவு

பாட்டு: மாலினிதேவி அருளம்பலம், கல்யாணி ஆறுமுகராசா, வாண்மதி சுப்பிரமணியம், ஜெயந்தி வரதராஜா, வாசுகி சுந்தரம்பிள்ளை, கலைமதி சிவானந்தம், பிரியதர்சினி [illegible], தேவராஜினி குமாரசாமி, கேதீஸ்வரி குமாரசாமி, சுந்தினி கிருஷ்ணசாமி, சசிகலாதேவி சபாநாதன், வசந்தி சபாநாதன், வளர்மதி தவஞானகுமாரலிங்கம், மங்களம் ஆறுமுகதாசன்.

வயலின்: சாந்தவதனி ஆறுமுகம், சுகிதாதேவி இளம்பிரகாசம், மாலினி செல்லத்துரை. வீணை: கமலை ஆறுமுகதாசன், சாந்தினி ஆறுமுகராஜா.

சாதாரண சித்தி

பாட்டு: ஸ்ரீவதனி தாமோதரம்பிள்ளை, யோகானந்தி சண்முகானந்தன், சந்திரிகா மகேந்திரன், கமலாதேவி கதிரவேலு, மலர்விழி பெருமாள்பிள்ளை, கோகிலம்பிள்ளை கந்தசாமி, இளைய மகாதேவன், மதிவதனி துரைராஜா, [illegible], சுமித்ரா பரஞ்சோதி, தயாவதி பாலகிருஷ்ணஐயர், சிவகுமாரன் சிவசுப்பிரமணியம்.

ஊர்காவற்றுறை

இரண்டாம் பிரிவு

பரமேஸ்வரி கணேஸ்-பாட்டு.

சாதாரணசித்தி

சாரதாம்பாள் வீரசிங்கம், சித்திரா தியாகராசா, ஜெகதீஸ்வரி கந்தையா, சுசீலா கனகரத்தினம், ராகினி சண்முகநாதன், ரஜனி சண்முகநாதன், மனோரஞ்சிதம் கந்தையா, சந்திரமாலினி இராமச்சந்திரன், மகேஸ்வரி மாணிக்கம், இரஞ்சனாதேவி ஆறுமுகம், சதாமதி நடராஜா, [illegible] சபாபதி, சிவாஜினி நல்லையா, மதிவதனி மயில்வாகனம்பிள்ளை, மற்றும் மாலினி கந்தசாமி எட்வேட், சந்திரசாந்தி கனகரத்தினம்பிள்ளை, கோமதி நிர்மலநாதன்.

வயலின்: அருள்சாந்தி விஜயகுமார்.

கோப்பாய்

முதலாம் பிரிவு

பாட்டு: நந்தினி சின்னத்துரை, விமலாதேவி கந்தையா, சரோஜினி விஜயரட்ணம்.

இரண்டாம் பிரிவு

பாட்டு: சாந்தவதனி சொலமன், பத்மஜோதினி கனகரத்தினம்.

சாதாரணசித்தி

பாட்டு: நாகநந்தினி நடராஜபிள்ளை, யோகேஸ்வரி கார்த்திகேசு, கணேசமலர் இராசையா, புஷ்பராணி காசிநாதன், தவமங்கை சிவபாதசுந்தரம், வசந்தி காசிநாதன், சாந்தினி இராசரத்தினம், கௌரிதேவி கனகரத்தினம், சசிலா வல்லிபுரம், துவாரகா கனகசபை, சாந்தி இரத்தினரட்ணம், [illegible], நிர்மலா ஜீவரானி நவரத்தினம், கலாராணி வரதராசா, தேவகி புவிராசசிங்கம், ஸ்ரீமதி லோகநாதன், தயாநிதி இரத்தினசபாபதிப்பிள்ளை, அஞ்சலா செல்வரத்தினம், புஷ்பலதா பரமானந்தன். வயலின்: சந்திராதேவி நவரத்தினம்.

தெல்லிப்பழை

முதலாம் பிரிவு

பாட்டு: தவநேசன் இராசையா, பவானி மகேஸ்வரசர்மா, வாணி கந்தவனம்.

இரண்டாம் பிரிவு

பாட்டு: சுபோதினி நவரத்தினம் (பாட்டு-வயலின்), முரளிதரன் கதிரவேலநாதன், அரியராணி சின்னத்துரை, [illegible] (பாட்டு-வயலின்), ரமேஷ் நடராசா, ஸ்ரீரஞ்சனி சிவஞானம், அருந்ததி சின்னத்தம்பி, ரூசலின் சந்திரிகா மேசஸ், [illegible] மத்தியாஸ், குகப்பிரியை துரைசிங்கம். வயலின்: ரூபிணி தம்பிராசா.

சாதாரணசித்தி

பாட்டு: சாந்தினி ஏரம்பு, விஜயகுமாரி கனகரத்தினம், கமலவதனி கந்தசாமி, தர்ஷினி நடராஜா. வயலின் தயாநிதி இராசதம்பி. (தொடரும்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவாஜி—ஜமுனா
நடித்த
நிச்சயதாம்பூலம்

நாகஸ்
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
டி. ஆர். ராஜகுமாரி
குலேபகாவலி

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
சிவாஜி - விஜயா
தங்கப்பதக்கம்
[சீசன் டிக்கட் ஆசனங்கள் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளலாம்]

இடமாற்றம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

அனுராதபுரம் தபால் அலுவலகத்தில் கடமையாற்றிய திரு. எஸ். கனகராசா பண்டத்தரிப்புத் தபால் அலுவலக அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார். முல்லைத்தீவு தபால் அலுவலக உதவித் தபால் அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். ஏரம்பமூர்த்தி பண்டத்தரிப்பு உதவித் தபால் அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0 0

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவின் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. வி. எஸ். நடராசா கோண்டாவில் இ. போ. ச. டிப்போவுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

0 0 0

சங்கானைப் பொலிசில் சேர்ந்த சார்ஜன்ட் எஸ். ஜயவீர கொழும்பு பொலிஸ் தலைமைக் காரியாலயத்திற்கும், சார்ஜன்ட் கே. துரைராசா கிளிநொச்சிப் பொலிசிற்கும் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

0 0 0

சுழிபுரம், தொல்புரம், வட்டு மேற்கு கிராமசேவையாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். சுழிபுரத்தில் கடமையாற்றிய மு. தர்மதாசன் தொல்புரத்திற்கும், தொல்புரத்தில் கடமையாற்றிய வி. செல்வநாயகம் வட்டு மேற்குக்கும், வட்டு மேற்கில் கடமையாற்றிய எஸ். பரமலிங்கம் சுழிபுரத்திற்கும் மாற்றம் பெற்றுள்ளனர். (அ)

இரு கி. சபைகள் பட்ஜட்

நெல்லியடி, ஞாயிறு

கட்டைவேலிக் கிராம சபையின் அடுத்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் இக்கிராம சபையின் தலைவர் திரு. வே. மாவலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அங்கத்தவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

உடுப்பிட்டிக் கிராம சபையின் வரவு செலவுத்திட்டமும் இச்சபையின் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்டது. இவ்வரவுசெலவுத் திட்டத்தில் பல கிராம வீதிகள் திருத்தியமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (அ)

......

பிரிவுபசார விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

"அரசாங்க ஊழியர்கள் பொதுமக்களுடன் கண்ணியமாகவும், பண்பாகவும் நடந்து கொள்ளவேண்டும். தாம் வகிக்கும் பதவியால் உயர்வு பெறுவதைவிடப் பொதுமக்களுடன் பழகும் விதத்திலும், சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றும்விதத்திலும் தங்கள் பதவிக்கு உயர்வு தேடுபவர்கள் மக்களினால் மதிக்கப்படுகின்றனர்" என்று பண்டத்தரிப்புத் தபால் அலுவலக அதிபர் திரு. எஸ். பரராஜசிங்கம் உதவித் தபால் அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் ஆகியோர் இடமாற்றத்தில் செல்வதையொட்டி பண்டத்தரிப்பு மக்கள் சார்பில் நடாத்தப்பட்ட பிரிவு உபசார விழாவில் பேசிய பண்டத்தரிப்பு பட்டினசபை முன்னாள் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் குறிப்பிட்டார்.

ஓய்வு பெற்ற பொதுவேலைப் பகுதி ஓவசியர் திரு. எஸ். நடராசா தலைமையில் பண்டத்தரிப்பு மத்திய கல்வி நிலையத்தில் நடாத்தப்பட்ட இவ்விழாவில் திரு. முத்தையா நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார். ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் திரு. வி. செல்லத்துரை, மலேசிய பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. த. இராஜலிங்கம், ஆசிரியை திருமதி மார்க்கரெட் துரையப்பா, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. உப தலைவர் திரு. நீ. ஜேக்கப், அரசாங்க மருந்து கலவையாளர்கள் சங்க யாழ். கிளைச் செயலாளர் திரு. என். எம். கந்தசாமி, ஆசிரியர் திரு. எஸ். பரமலிங்கம் ஆகியோரும் பேசினர். (அ)

......

மன்றம் அமைத்தனர்

நெல்லியடி, ஞாயிறு

தென்புலோலிப் பகுதியில் 'முதன்நம்பிக்கையாம் மக்கள் மன்றம்' என்றபெயரில் சாந்தியூர் வீரபத்திரர் கோவில் முன்றலில் மன்றம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

குருக்கைகட்டி, சாந்தியூர், வெள்ளுருவை, அறையாழூர் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய இம்மன்றம், இக்கிராம மக்களின் சமூக, பொருளாதார, அரசியல், சமய, கல்வி, கலாச்சார அபிவிருத்தியை நோக்கமாகக்கொண்டு செயல்படுவதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இம்மன்றத்தின் தலைவராக புலோலி ப. நோ. கூ. சங்க முகாமையாளர் திரு. சே. அருணகிரியும், செயலாளராக திரு. ஏ. செல்லப்பாவும், பொருளாளராக திரு கே. வி. சரவணபவானந்தனும் தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் இம்மன்றத்தின் எல்லைக்குட்பட்ட நான்கு கிராமங்களுக்கும் நான்கு உபகமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது. [அ]

ஈழநாடு
The EELANADU

தரிசு நிலங்களைப் பயன்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நிரு. காலபோகத்திற்கென விதைக்கப்படாத காணிகளிலும் தரிசாகக் கிடக்கும் மேட்டுநிலங்களிலும் சமீபத்தில் பெய்த மழைநீர் வற்றிப் போகுமுன்னர் எள், பயறு, குரக்கன் போன்றவற்றைப் பயிரிடத் தயாராகுமாறு தீவுப்பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. க. சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.

இப்பயிர்களைப் பயிரிடவிரும்புவோர் விதைகளைத் தத்தம் பகுதி விவசாயச்சேவையாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை புங்குடுதீவு, மண்டைதீவு போன்ற இடங்களில் கட்டாக்காலிகளின் பிரச்னை இருப்பதால் இவற்றை வன்னிப் பிரதேசத்திற்கு அனுப்புவதற்கு குழுநிலையில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. (ஸ்ரீ)

3—1 கோலால் வெற்றி

வரணி, ஞாயிறு

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கும் அண்மையில் நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் முதல் ஐந்து ஆட்டங்களில் 3—1 ஆட்டங்களைப் பெற்று சாவகச்சேரி தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் வெற்றியைத் தமதாக்கிக்கொண்டனர். இப்போட்டி பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதற்கு மத்தியஸ்தராக திரு. நா. [illegible] கடமையாற்றினார். பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர் கோஷ்டிக்கு திரு. அ. யோசேப்பும் சாவகச்சேரி தெ. ப. உ. வி. கூட்டுறவுச் சங்க ஊழியர் கோஷ்டிக்கு திரு. சோ. சந்தனாவும் தலைமைவகித்தனர். (அ)

ஓய்வு பெறுகிறார்

நெல்லியடி, ஞாயிறு

நெல்லியடி மத்தியமகாவித்தியாலய உபஅதிபர் திரு. வீ. மகாலிங்கம் இம்மாதம் முதல் ஆசிரியசேவையிலிருந்து இளைப்பாறுகிறார்.

கரவெட்டி வடக்கு நெல்லியடியைச் சேர்ந்த திரு. மகாலிங்கம் கடந்த 30 ஆண்டுகளுக்குமேலாக இலங்கையின் பாகங்களிலும் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். வரலாற்றுப் பட்டதாரியான இவர் சட்டத்தரணி, நொத்தாரிசு பரீட்சைகளிலும் ஏற்கனவே சித்தியடைந்து சட்டத்தரணியாகச் சத்தியப் பிரமாணமும் செய்துகொண்டவர்.

சமூகசேவைகளில் ஈடுபாடு கொண்ட திரு. மகாலிங்கம் பருத்தித்துறைப் பகுதி [illegible] சபையின் தலைவராகத் தற்போது சேவையாற்றிவருகிறார். பிரபல தமிழ் - ஆங்கில பத்திரிகை எழுத்தாளரான இவர் இம்மாதம்முதல் பருத்தித்துறையில் சட்டத்தொழிலை மேற்கொள்ளவுள்ளார். [அ]

ஊர்காவற்றுறை தொகுதியில்

14 அபிவிருத்தித்திட்டங்களை

அமைக்க பண்டிதர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நிரு. ஊர்காவற்றுறைத்தொகுதிக்கான பதினாலு அபிவிருத்தித் திட்டங்களை உள்ளடக்கிய மகஜர் ஒன்றை திட்டமிடல் பொருளாதார அமைச்சின் அங்கீகாரத்தினைப் பெறும் பொருட்டு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எம். விஜயபாலவுக்கு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அனுப்பிவைத்துள்ளார்.

இம்மகஜரில் திரு. இரத்தினம் எம். பி. கூறியிருப்பதாவது:

பிரதேச அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் எனது தொகுதி அபிவிருத்திக்கென 1976-ம் ஆண்டும் 30,000 ரூபா செலவிடப் படவுள்ளதாக அறிவித்திருக்கிறார். இத்தொகை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதனை எனக்கு அறியத்தாருங்கள்.

1976-ல் நீங்கள் அனுப்பிய வேலைத்திட்டங்களின் விபரங்களையும் எனக்குத் தெரிவிக்கவும். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென 1976-ல் 300 லட்சம் ரூபாவும் இந்த 1977-ம் ஆண்டில் 850 லட்சம் ரூபாவும் அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவித்தது.

இந்த வகையில் மேற்படி தொகையில் இருந்து தொகுதிரீதியாக எனது தொகுதிக்கு 8 லட்சம் ரூபாவுக்குக் குறையாத தொகை ஒதுக்கப்பட வேண்டும்.

எனது தொகுதியில் பின்வரும் அபிவிருத்தித் திட்டங்களை ஒரு மாதத்திற்குள் திட்டமிடல் பொருளாதார அமைச்சின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புங்குடுதீவு, நாரந்தனை, நெடுந்தீவில் மூன்று பீடித் தொழிற்சாலைகள் அமைத்தல். ஊர்காவற்றுறையில் படகு கட்டும், திருத்தும் தொழிற்சாலை அமைத்தல். நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இரு தென்னந்தும்புத் தொழிற்சாலைகள் நிறுவுதல். நெடுந்தீவு, புங்குடுதீவில் இரு வேப்பெண்ணெய் தொழிற்சாலைகள் அமைத்தல். நெடுந்தீவு, புங்குடுதீவில் இரு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் நிறுவுதல். புங்குடுதீவு சரம்பன், வேலணையில் மூன்று விவசாயப் பண்ணைகள் அமைத்தல். புங்குடுதீவில் கடதாசித் தொழிற்சாலை அமைத்தல் (இத் தொழிற்சாலைக்கு பழைய கடதாசிகளைப் பயன்படுத்தலாம்). நெடுந்தீவு, புங்குடுதீவு, நாரந்தனை, அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் 8 கோழிப் பண்ணைகள் அமைத்தல். நெடுந்தீவில் வெள்ளாட்டுப்பண்ணை அமைத்தல். அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவில் 4 ஆமணக்கெண்ணெய் பண்ணைகள் நிறுவுதல். புங்குடுதீவு, நெடுந்தீவு, சரம்பன், வேலணையில் 4 மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைத்தல். நாரந்தனையில் பனஞ்சீனித் தொழிற்சாலை அமைத்தல். புங்குடுதீவில் சிமெந்து பொருட்கள் உற்பத்திச்சாலை நிறுவுதல். [ஸ்ரீ]

மாவு, எரி......

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தில் இ. போ. ச. பஸ்களுக்கும் உழவு இயந்திரங்களுக்கும் முதலிடம் அளிக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

நேற்று கொழும்பிலிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் 2,064தொன் மாவும் 1,55,000 கலன் மண்ணெண்ணெயும் 86 ஆயிரம் பெற்றோலும் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அரசு அறிவித்தது.

இதே வேளையில் கொழும்புத் துறைமுகத்தில் 3,500 தொன் மாவு இறக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

ஒளிமயமான திட்டம்

யாழ். நகர கமிஷனர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நிரு. 'யாழ்நகரை மேலும் ஒளிமயமாக்கும் திட்டத்திற்கு மின்சாரவேலைகளுக்காக 10 லட்சம் ரூபாவும் நீர்விநியோகத்திற்கு 4 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.'

இவ்வாறு யாழ்மாநகர விசேட ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசேப், நவீன சந்தையில் கடைஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பொதுமக்களுக்குச் சேவைசெய்யும் நோக்கத்துடனேயே தான் ஆணையாளர் பதவியை ஏற்றுள்ளதாகவும் யாழ். மாநகரத்தில் புத்தாண்டில் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியுள்ளார் எனவும் குறிப்பிட்டார். [உ]

இரத்தினக்கல் கடத்தல்

கொழும்பு, ஞாயிறு

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தனியார்கடைகளிலுமிருந்து சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் இரத்தினக் கற்களை சுங்கப்பகுதியினர் கண்டுபிடித்துள்ளனர். நாட்டுக்குள் விலை உயர்ந்த இரத்தினக் கற்கள் அதிகமாகக் கடத்தப்படுவதையிட்டு சுங்க இலாகாவினர் கவலை தெரிவித்துள்ளனர்.

......

பணம்பெட்டியை திருடர் காலிசெய்தனர்

மாவிட்டபுரம், ஞாயிறு

இரவு வீடொன்றினுள் புகுந்த இனந்தெரியாதவர்கள் பணப்பெட்டியிலிருந்த ரொக்கப்பணத்தைக் களவாடிச் சென்றுவிட்டனராம்.

அச்சுவேலி தம்பாலை ஒழுங்கையைச் சேர்ந்த [illegible] என்பவரது வீட்டினுள் இரவு புகுந்த இனந்தெரியாதவர்கள் அங்கிருந்த பணப்பெட்டியிலிருந்து 1730 ரூபா பணத்தை திருடிச் சென்றுவிட்டனராம்.

[illegible] கேட்டு எழுந்து பார்த்தசமயம் பணப்பெட்டி காலியாக இருந்ததையடுத்து காங்கேசன்துறைப் பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. (அ)

,,திருவாசகத்தை தெரிந்தவர்கள் உயிருக்கு உறுதி தேடியவராவர்''

யாழ்ப்பாணம், திங்கள்

''திருவாசகம் எனும் தெய்வத் தமிழ் மறை சிறந்த இலக்கியச் சுடர்மணியாகவும் ஞானக் களஞ்சியமாகவும் திகழ்கின்றது. இந்த அருள் நூல் திருக்கோவையாருடன் சேர்ந்த சைவத்திருமுறை பன்னிரண்டில் 8வது திருமுறையாக அமைந்துள்ளது. இது தோன்றிய காலம் தொடக்கம் கோடிக்கணக்கான மக்களின் மனத்தை உருக்கி மாசை நீக்கி மாண்புறச் செய்திருக்கிறது. உள்ளத்தை உருக்கி உயர்வடையச் செய்வதில் உலக இலக்கியத்திலேயே ஒப்பற்றது திருவாசகமென்னும் மிகையாகாது'

இவ்வாறு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றுவரும் 22வது மணிவாசகர் விழாவைக் கடந்த வியாழன்று ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'சமயத் தொடர்பு ஒன்றும் இல்லாமல் இலக்கியம் என்ற அளவில் திருவாசகத்தைப் படித்து இன்புற்றவர்களும், இன்புறுபவர்களும் பலராவர். பண்பட்ட உள்ளமுடைய வாசகர் எந்நாட்டவராயினும், எச்சமயத்தவராயினும், எக் கொள்கையுடையவராயினும் இத்தெய்வப் பாடல்களைத் தெரிந்துகொள்வாராயின் இந் நூலைத் தங்கள் உயிருக்கு உறுதியாகப் பற்றிக்கொள்வர் என்பது திண்ணம். இத்தகைய சிறப்புவாய்ந்த திருநூலை அருளிச்செய்த மணிவாசகப் பெருமானுக்கு ஆண்டுதோறும் விழா எடுத்து வருகின்ற காரைநகர் மணிவாசகர் சபையினர் பாராட்டுக்குரியவர்கள்'

விழாவன்று பிற்பகல் 3-00 மணிக்கு சடையாளி வைரவர் கோவிலிலிருந்து திருவாசகத் திருமுறை ஊர்வலம் ஆரம்பமாகி [illegible], சம்பு வீதி, [illegible] இன்னும் பகுதிகளுக்கூடாக வந்து ஈழத்துச்சிதம்பரத்தினை வந்தடைந்தது. ஊர்வலத்தின்போது அடியார்கள் நிறைகுடம் வைத்தும், அர்ச்சனை செலுத்தியும் மணிவாசகப்பெருமானுக்கும், திருவாசகத் திருமுறைக்கும் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்தனர்.

மணிவாசகர் சபைத் தலைவர் திரு. க. சிற்றம்பலத்தின் வரவேற்புரையை அடுத்து வித்துவான் க. சொக்கலிங்கம் 'ஆதியும் அந்தமும்' என்னும் பொருள் பற்றியும் பண்டிதை [illegible] '[illegible]' என்ற பொருள் பற்றியும் உரையாற்றினர். (அ)

கும்பாபிஷேகம்

பன்னாலை வரத்தலப் கற்பகப்பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம் நளவருஷம் பங்குனிமாதம் 24-ந் திகதி [6-4-77] புதன்கிழமை யென நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இ. சபாரத்தின சர்மா
5165

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜனவரி மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna Telegrams: EELANADU Telephone 389. Registered as a Newspaper in Lanka.

மலகூடத்தில் இறந்துகிடந்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

நீண்டநாட்களாக நோயினால் பாதிக்கப்பட்டு வந்த தொழிலாளி ஒருவர், அவரது வீட்டு மலகூடத்தில் மரணமாகிக் கிடந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அரியபுத்திரன் நடராசாவின் மரண விசாரணையின் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இவர் 'சாகப் போகிறேன்' என அடிக்கடி வீட்டில் கூறிவந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது.

பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்ட மரண விசாரணை அதிகாரி விசாரணையை ஒத்திவைத்தார். (ச)

இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டெஸ்டின் 2-வது நாளான இன்று ஆஸ்திரேலியா 8 விக்கட்டுகளை இழந்து 517 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

கோஸியர் 168 ஓட்டங்களையும் சாப்பல் 121 ஓட்டங்களையும் பெற்றனர். கோஸியர் இதுவரை பெற்ற ஓட்டங்களில் இதுவே அதிக தொகையாகும்.

பின்னர் ஆட்டத்தை ஆரம்பித்த பாக். ஆட்டநேர இறுதியில் 1 விக்கட் இழப்புக்கு 186 ஓட்டங்களைப் பெற்றது. மஜீத் கான் 76 ஓட்டங்களைப் பெற்றார். சாதிக் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களைப் பெற்றார். (உ)

ரூபா 35,000......

[1ம் பக்கத் தொடர்ச்சி]

[24 பவுண்], 3 தங்கச் சங்கிலிகள் [26 பவுண்], 3 ஜோடி காப்புகள் [12 பவுண்] ஆகியவையே திருட்டுப் போயுள்ள நகைகளாகும்.

வெளியூர்களில் இருக்கும் இவ் வீட்டுக்காரரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் நகைகளே இவை என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற இச் சம்பவத்தை அடுத்து சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் திரு. பி. வீ. டி. [illegible] தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி பற்றை ஒன்றுக்குள் இருந்து திருட்டுப் போன சைக்கிளை மீட்டது. எவரும் கைது செய்யப்படவில்லை. (உ)

வேலை நீக்கம்

சங்கானை, ஞாயிறு

யாழ்ப்பாணம் கூட்டுறவு அதிகார சபையின் தீர்மானத்திற்கமைய சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் கடமையாற்றிய ஆறு ஊழியர்களுக்கு வேலைநீக்க உத்தரவு வழங்கப்பட்டது.

76-ம் ஆண்டு பெப்ரவரி 1-ம் திகதிக்குப்பின் கூட்டுறவுச் சங்கங்களில் வேலை வழங்கியவர்களிடமிருந்து சம்பளத்தொகையை அறவிடவேண்டுமென்ற கூட்டுறவு அதிகாரசபையின் தீர்மானம் சகல பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் அதிகாரசபை செயலாளர் திரு. ஜெயகாந்தனால் அனுப்பிவைக்கப்பட்டது.

இத்தீர்மானம் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் செயல்பட ஆரம்பித்துள்ளது.